**13.05.2025.** CC. 25/2015 PW.5 திரு.ராஜேஷ்

**கடந்த 12.06.2015ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 9/2025, dated 18.02.2025 ன் படி குவி.மு.ச 1973 பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் கொத்தனார் மற்றும் சமையல் வேலைச் செய்து வருகிறேன். 22.11.2014 அன்று நான் சமையல் வேலைச் செய்வதற்காக சென்றேன். மாலை 06.00 - 07.00 மணியிருக்கும். எத்தனை போலீசார்கள் இருந்தார்கள் என்று எனக்கு தற்சமயம் ஞாபகமில்லை.

2. மூசாரி என்பது ஒரு கூட்டு ரோடு. எப்போதும் ஆட்கள் நடமாட்டம் இருக்குமா என்றால் பள்ளி நேரத்தில் இருக்கும். போலீசார் எழுதிக் கொடுத்த பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் வேறு வழக்குகளில் சாட்சி சொல்ல வரவில்லை. நான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துவிட்டு வேறு எங்குச் சென்றேன் என்றால் எங்கள் வண்டியையும் சோதனை செய்தார்கள். காவல்நிலையம் மட்டும் சென்றோம். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,3வது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

3. நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீதிமன்றத்தில் நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தின் போது போட்ட கையெழுத்திற்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் போட்ட கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் நான் போட்ட கையெழுத்து தான். நான் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்துச் செய்தேன். இரண்டு கையெழுத்து போட்டேன். ரெக்கவரிக்கு என்று ஒரு கையெழுத்து வாங்கினார்கள்.

4. அன்றையதினம் பள்ளியாடியில் உள்ள திருமண வீட்டிற்கு சமையலுக்காக சென்றேன். காவல்நிலையத்திற்கு அருகில் வாகன சோதனை நடந்ததா என்றால் இல்லை. மூசாரியில் வைத்து நடந்தது. ஜெனிஷ் குமார் மிடாலத்தில் உள்ளார். அவரும் என் கூடத்தான் வந்தார். நான் வேலை முடித்து வரும்போது தான் போலீசார் சோதனைச் செய்தார்கள். மூசாரி சந்திப்பில் 20 நிமிடங்கள் இருந்திருப்பேன்.

5. நாங்கள் செல்வதற்கு முன்பே மூசாரி சந்திப்பில் போலீசார் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை பிடித்து வைத்திருந்தார்களா என்றால் இல்லை. நான் ஸ்டேசனில் வைத்து தான் பார்த்தேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள படி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கொடுக்கவில்லை என்றும், உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், மேற்படி சாட்சியம் பொய்சாட்சியம் என தெரிய வந்தால் நானும் தண்டிக்கத்தக்க நபர் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.